இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவகம் – 2010

---

1. நிதிக்கூற்றுக்கள்.

1.1 அபிப்பிராயம்.

எனது பரிசீலனையிலிருந்து தென்பட்டதும் எனக்கு வழங்கப்பட்ட முழு அளவிலான தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும், இலங்கை அடிப்படை கற்கைகள் நிறுவகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களினால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அடிப்படை கற்கைகள் நிறுவகத்தின் நிலைவரத்தையும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு நடவடிக்கைளின் நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையானதாகவும் நேர்மையானதாகவும் காண்பிக்கக்கூடிய வகையில், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகிறேன்.

1.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்.

1.2.1 உயர் கணக்கீட்டு கொள்கைகள்.

2010 திசெம்பர் 31 இல் ரூபா 371,946,503 மொத்த கிரயத்தைக் கொண்ட 15 வகையான நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பெறுமதி பூச்சியமாக இருந்த போதிலும் அவற்றைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் அச்சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து அப்பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டின் போது மெய்மையாய்வு அறிக்கையில் காணப்படும் ரூபா 2,483,241 பெறுமதியான 07 வகையான பொருட்களுக்குரிய காணாமல் போனமை, பற்றாக்குறை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமை மற்றும் மிகைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், ரூபா 39,050 ஆன கைதவிர்க்கப்பட்ட 19 பொருள் அலகுகளின் பெறுமதியை நிலையான சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எதிர்வரும் ஆண்டிற்காக அட்டுறு அடிப்படையில் சீராக்கம் செய்யப்பட வேண்டிய ரூபா 203,391 ஆன செலவினம் நடப்பாண்டில் செலவிடும் போது நிறுவன நிதியத்திற்கு சீராக்காமல் நிதிச்செயலாற்றல் கூற்றிற்கு சீராக்கம் செய்ததன் காரணத்தால் ஆண்டின் தேறிய பற்றாக்குறை அப்பெறுமானத்தால் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) எதிர்வரும் ஆண்டிற்காக உத்தியோகத்தர்களுக்குச் செலுத்த வேண்டிய விழா முற்பணமாக ரூபா 300,000 தொகை முறையான அங்கீகாரமின்றி ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அத்தொகை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

1.2.2 இணக்கமின்மை.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 4 நிலையான சொத்து விடயங்களின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பொருள் கணிப்பீட்டு அறிக்கையில் காணப்படும் பெறுமதிகளுக்கிடையே ரூபா 126,325 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பொருட் கணிப்பீடு அறிக்கையில் காணப்படும் 4 இருப்பு உருப்படிகள் மற்றும் பௌதீக மீதி மற்றும் இருப்புப் பதிவேட்டின் பெறுமதி என்பவற்றிற்கிடையே ரூபா 5,247 தொகையான வேறுபாடும் 05 இருப்பு உருப்படிகளுக்குரிய பொருள் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பெறுமதிகளுக்கிடையே ரூபா 49,419 தொகையான வேறுபாடும் அவதானிக்கப்பட்டது.

1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வெளிநாட்டு கொள்வனவிற்காக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 24 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 613,786 குறித்த கட்டுநிதி 04 ஆண்டுகள் முதல் 16 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து தீர்த்து வைக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது.

(ஆ) வழங்கல் மற்றும் சேவைகளுக்கான கடன்கொடுத்தோர் பட்டோலையில் காணப்படும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 5,300 கூட்டுத்தொகையான 02 மீதிகளும், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 4,575 கூட்டுத்தொகையான 02 மீதிகளும், தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள ரூபா 112,044 ஆன ஏனைய 05 கடன்கொடுத்தோர் மீதிகளும் ரூபா 27,457 பெறுமதியான 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான ஏனைய 02 செலவின மீதிகளையும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 768,629 ஆன கடன்கொடுத்தோர் மற்றும் 22 அட்டுறு செலவின விடயங்களுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் அம்மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

ரூபா 2,020,836 ஆன ஓய்வுபெற்ற அங்கத்தவர்களின் நிதியக் கணக்கின் மீதியின் சரியான தன்மை, ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள் தொடர்பான விபரங்கள், 2010 திசெம்பர் 31 இல் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் போன்ற இல்லாமை காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் தீர்மானங்களுடன் இணங்காமை.

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படைக் கற்கைகள் நிறுவக அதிகாரச் சட்டத்தின் 03 மற்றும் 04 (அ) மற்றும் (ஏ) பிரிவு. | ஆராய்ச்சி செயற்பாடுகளை நிறைவேற்று வதற்காக விதிக்கோவையை தயாரித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (ஆ) நிதிப் பிரமாணம் 396(ஈ) | விநியோகிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப் படாத ரூபா 5,895 கூட்டுப்பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2001 யூலை 17 ஆம் திகதிய 01/2001 ஆம் இலக்க மத்திய மாகாண இறைவரி ஆணையாளரின் சுற்றறிக்கைக் கடிதம் | ரூபா 201,432 கொள்ளவிற்காக ரூபா 2,014 தொகையான புரள்வு வரி அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் உடன்படிக்கையின் 17 ஆம் பிரிவு | நிறுவகத்திடமுள்ள உபகரணங்களைப் பயன்படுத்துவதற்காக சிற்றுண்டிச்சாலை ஒப்பந்தக்காரரிடமிருந்து ரூபா 100,000 தொகைக்கான காப்புறுதி மேவுகை ஒன்றைப் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு.

### 2.1 நிதிசார் மீளாய்வு.

### 2.1.1 நிதிசார் விளைவுகள்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் ஏற்பட்டிருந்த நிதிசார் விளைவுகள் ரூபா 7,154,194 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 143,221 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 7,297,415 ஆன குறைவிற்காக தனிப்பட்ட பதவியணிக்கான வேதனங்கள் ரூபா 12,524,447 ஆலும் பராமரிப்புச் செலவினம் ரூபா 2,923,119 ஆலும் அதிகரித்தமையும் விசேடமாக தாக்கமளித்திருந்தன.

2.2 செயற்பாட்டு மீளாய்வு.
------------------------------------

2.2.1 செயலாற்றல்.
----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1981 இன் 55 ஆம் இலக்க இலங்கை அடிப்படை கற்கைகள் நிறுவகத்தினை தாபிப்பதற்குரிய சட்டத்தின் திருத்திய 1997 இன் 05 ஆம் இலக்கச் சட்டத்தின் 2(4) பிரிவின் பிரகாரம், தேசிய தேவைப்பாட்டுடன் தொடர்புடையதாகவும் அதன் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தேசிய தேவைப்பாடுகளை நிறைவேற்றப்படுகின்ற வகையில் தயார் செய்யப்படாதிருந்ததுடன், அதன் ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்களில் 4 ஐ தவிர ஏனைய ஆராய்ச்சிகளின் இறுதிப் பெறுபேறுகள் நடைமுறையில் அவ்விடயத்துறையின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தப்படாதிருந்தாக வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறே ஆராய்ச்சிகளுக்குரிய ஆக்கவுரிமைகளை ஒரு ஆராய்ச்சிக்கு மட்டுமே பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மொத்த ஆய்வுப் பிரசுரங்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டில் அராய்ச்சி நடவடிக்கைளில் ஈடுபட்ட பதவியணிக்காக மேற்கொள்ளப்பட்ட வேதனங்கள் மற்றும் ஆய்வுக் கொடுப்பனவு செலவினம் ரூபா 24,885,818 ஆக இருந்தது. அது வெளியிடப்பட்ட மொத்த வெளியீடுகளுக்கு ஒப்பாக ஒரு பதிப்புக்கு சராசரி செலவினம் ரூபா 606,971 மட்டில் காணப்பட்டது.

(இ) ஆய்வுச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு 10 முதல் 23 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், பூர்த்தி செய்யப்படாத 20 ஆய்வுகள் காணப்படுவதாக 2011 மே மாதம் 30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டினுள் ஆய்வுச் செயற்திட்டங்களில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சி உதவியாளர்கள் தொழிநுட்ப வல்லுனர்கள் உட்பட ஆராய்ச்சி பதவியணிக்காக சம்பளம் மற்றும் ஆய்வுப் படிகளாக முறையே ரூபா 35,922,063 மற்றும் ரூபா 5,122,085 உமாக ரூபா 41,044,148 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், தேசிய தேவைப்பாட்டினை இனங்கண்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா எனவும் அவ் ஆய்வுகளினூடாக சமூகத்திற்கும் மக்களுக்கும் வழங்கப்பட்ட பங்களிப்பு எவ்வகையிலானது என்பது தொடர்பாக மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

1993 முதல் 2000 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அச்சிடப்பட்ட ரூபா 810,061 பெறுமதியான 6877 ஆராய்ச்சி வெளியீடுகள் 2010 திசெம்பர் 31 வரையிலும் விற்பனை செய்யப்படாமல் எஞ்சியிருந்தது.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1989 ஆகஸ்ட் 13 ஆம் திகதி "பொப்ஹேம், ஹார்போடம் மற்றும் வுட்லேன்ஸ்" ஆகிய தோட்டங்களை கொள்வனவு செய்யும் பொருட்டு ரூபா 140,000 உம் அதற்கான சட்டச் செலவுகள் மற்றும் பணிக்கொடை தொகையாக ரூபா 312,387 தொகையும் 1989 முதல் 2010 திசெம்பர் 31 வரை அவற்றின் பராமரிப்பு நடவடிக்கை மற்றும் ஊழியச் சம்பளம் என்பவற்றிற்காக ரூபா 2,671,122 தொகையும் நிறுவகத்தினால் செலவிடப்பட்டிருந்த போதிலும், 2005 மே 01 ஆம் திகதி முதல் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை 20 ஆண்டுகளுக்காக இத்தோட்டத்தின் நிர்வாகத்தை உடன்படிக்கையொன்று மூலம் ஓர் அமைப்பிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கையின் பிரகாரம், நிறுவகத்திற்கு எவ்வித பிரதிபலன்களும் கிடைக்கப்பெறாததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இக்காணியை எதிர்பார்க்கப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. குறித்த தோட்டத்தின் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வாண்டு வரையிலும் தயாரிக்கப்பட்ட கணக்குக் கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் உத்தியோகத்தர்களுக்காக தேநீர் வழங்குவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 358,553 தொகை செலவிடப்பட்டு நிறுவகத்தின் செலவில் நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றை வழங்கியிருந்தும் சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக ஒப்பந்தக்காரருக்கு மாதாந்தம் ரூபா 25,000 வீதம் நிறுவகத்தினால் கொடுப்பனவு செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் காரணமாக 1999 முதல் 2010 ஆம் ஆண்டு இறுதி வரை மொத்தம் ரூபா 3,970,003 தொகை கொடுப்பனவு செய்திருந்தமை சிக்கனமற்ற செலவாக அவதானிக்கப்பட்டது.

2.2.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

20 ஆண்டுகளுக்கு மேலான காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் ரூபா 71,135,242 ஆன இரசாயன கூட உபகரணங்கள் மற்றும் ஏனைய 06 வகை உபகரணங்கள் நிறுவக ஆராய்ச்சிக் கூடங்களில் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

2.2.5 கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்திற்கு பிரதான ஆக்கக்கூறுகளின் கீழ் தயாரிக்கப்படாதிருந்ததுடன், அதற்காக கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.2.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் குறைந்தது ஆண்டொன்றிற்கு 04 தடவையாவது கூட்டப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டிற்காக ஒரு கூட்டமேனும் கூட்டப்பட்டிருக்கவில்லை.

2.2.7 உள்ளகக் கணக்காய்வு

நிதிப் பிரமாணம் 134(2) மற்றும் (3) இன் பிரகாரம் நிறுவகத்தின் நிதி செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுவூட்டுவதற்காக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.8 மனித வள முகாமைத்துவம்.

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மனித வளக் கட்டுப்பாடு தொடர்பாக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.9 பாதீட்டுக் கட்டுப்பாடு.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட செலவினம் உள்ளவாறான செலவினத்துடன் ஒப்பிடும் போது 07 செலவின விடயங்களுக்குரிய 13% முதல் 95% வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது வினைத்திறனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ஆ) 03 செலவின விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட நிதிஏற்பாட்டை மிகைத்து ரூபா 1,567,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிறுவனத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) பதிவேடுகளின் பராமரிப்பு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்